## மணப்பாறை நகராட்சி

**2018 – ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் (28. 09.2018) 28–ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நகர்மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற தனி அலுவலரின் சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| 28.09.2018 | **பொருள் – 1**<br>நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.22660/2018டிபி3 – 4 நாள்.25.09.2018. கட்டிட அனுமதி Online முறையில் நடைமுறைபடுத்த உரிய கூர்ந்தாய்வு கட்டணம் ஒவ்வொரு நகராட்சிக்கும் மாறுபட்டு உள்ளதால் அனைத்து பகுதிகளுக்கும் ஒரே மாதிரியான கட்டண விகிதமாக ரூ.500/– (ஐநூறு மட்டும்) நிர்ணயம் செய்தும் கட்டிட விண்ணபம் சமர்ப்பிக்கும் சமயத்தில் இணைவழி வாயிலாக செலுத்தும் வகையில் உரிய மாறுதல்கள் செய்யவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே கட்டிட அனுமதி கோரும் விண்ணப்பிக்கும் போதும் கூர்ந்தாய்வு கட்டணம் ரூ.500/– வசூல் செய்யவும் சுற்றறிக்கையினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு : –** அனுமதிக்கலாம். | **தீர்மான எண். 422**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 28.09.2018 | **பொருள் – 2**<br>இந்நகராட்சியில் இயங்கிவரும் கணினிகள், பிரிண்டர்கள் ஆகியவைகளுக்கு ஆண்டு பராமரிப்பு 30.09.2018 ம் தேதியுடன் முடிவடைய உள்ள நிலையில் சென்ற ஆண்டு கணினி மற்றும் பதிவெடுக்கும் இயந்திரங்களுக்கு வழங்கப்பட்ட அதே நிறுவனத்திற்கு புதுப்பித்துக் கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் யூபிஎஸ்கள் 5KVA பிப்ரவரி 2018–ம் மாதத்தில் முடிவடைந்துள்ள நிலையில் அதற்கு உண்டான ஆண்டு பராமரிப்பு அந்த நிறுவனத்திடமே புதுப்பித்துக்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் 2KVA மற்றும் 5KVA –வும் 19.03.2018–ம் தேதியுடன் ஆண்டு பராமரிப்பு புதுப்பித்துக்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது. லைன் பிரிண்டரின் ஆண்டு பராமரிப்பு 14.05.2018 உடன் முடிவடைந்த நிலையில் அதனையும் அந்த நிறுவனத்திடமே மீண்டும் சென்ற ஆண்டுக்கான தொகையை வழங்கி ஆண்டு பராமரிப்பு ஏற்படுத்திக்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்டவாறு கணினி சார்ந்த அனைத்து உபகரணங்களுக்கும் ஆண்டு பராமரிப்பு மேற்கொள்ள உத்தேச செலவினத் தொகை ரூ.1,50,000/– க்கும் செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு : –** மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மான எண். 423**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| 28.09.2018 | **பொருள் – 3**<br>இந்நகராட்சியில் 2018–19 முதல் 2020 –2021 மூன்றாண்டு குத்தகை இனங்கள் வருகின்ற 28.08.2018 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட விபரத்தினை செய்தி மக்கள் தொடர்பு அலுவலரின் ந.க.எண்.03/செ.ம.தொ/2018, நாள்.13.08.2018 தேதிய கடிதத்தின்படி, 14.08.2018ல் மாலை முரசு நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கான தொகை ரூ.19,688/–ஐ பிரைட் அட்வர்டைஸ்மெண்ட் நிறுவனத்திற்கு வழங்கவும் செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு : –** மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.25/2018/அ2) | **தீர்மான எண். 424**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

**தனி அலுவலர்**
**மணப்பாறை நகராட்சி**